**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>
**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி</u>**

<u>2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை</u>
**<u>இ.ம.எண்.03/2022 இன் அ.வ.எண்.193/2022</u>**

செல்வநாயகம் ... மனுதாரர் / 2ம் வாதி

/ எதிர் /

1.K.வாசுதேவன்
2.K.குமாரசாமி
3.பாலாமணி ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 17.11.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சண்முகம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரே முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**<u>ஆணையுரை</u>**

நீதிமன்ற ஆணையரை நியமித்து தாலூக்கா நில அளவையர் உதவியுடன் மனுச்சொத்துக்களின் பௌதீக தன்மையை பார்வையிட்டு, மனுதாரரின் சொத்தினையும், எதிர்மனுதாரரின் சொத்தினையும் அளவை செய்து எல்கைகளை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சங்கதியின் சுருக்கம்</u> :**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி ஆவார்.

உபயதரப்பினர்களுக்கிடையே எல்கை தொடர்பாகவே பிரச்சனை ஏற்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தொடர்ச்சியாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்குள் அத்துமீறி நுழைய முயற்சி செய்து வருகின்றனர். எனவே, உபயதரப்பினர்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்தினை அளந்து எல்கைகளை நிர்ணயம் செய்தால் மட்டுமே மேற்படி பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு காண இயலும்.

**2.2)** நீதிமன்ற ஆணையர் மூலம் நில அளவையர் உதவியுடன் உபயதரப்பினர்களின் சொத்துக்களை அளந்து எல்கைகளை நிர்ணயம் செய்வது மிகவும் அவசியமாக உள்ளது. அல்லாத பட்சம் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டு விடும். ஆகவே நீதிமன்ற ஆணையரை நியமித்து தாலூக்கா நில அளவையர் உதவியுடன் உபயதரப்பினர்களின் சொத்துக்களை பார்வையிட்டு, அளவை செய்து எல்லைகளை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் தனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 2, 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** **<u>பிரச்சினை</u>** :

வழக்காவணங்கள் மற்றும் மனுவில் கண்ட சங்கதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி ஆவார். எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்குள் அத்துமீறி நுழைய முயற்சி செய்து வருகின்றனர் என்றும், எனவே நீதிமன்ற ஆணையரை நியமித்து மனுதாரர்

மற்றும் எதிர்மனுதாரர்களின் சொத்துக்களை பார்வையிட்டு தாலூக்கா நில அளவையர் உதவியுடன் அளந்து, எல்கைகளை நிர்ணயம் செய்து வரைபடமும், அறிக்கையும் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் தனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என மேலொப்பம் செய்துள்ளார். ஒரு சொத்து குறித்து எல்லைகள் தொடர்பாகவோ அல்லது பௌதீக தன்மை தொடர்பாகவோ ஆக்கிரமிப்பு தொடர்பாகவோ ஒரு தரப்பில் தெரிவிக்கப்படும் சங்கதிகளை மறுதரப்பினர் மறுக்கும் பட்சத்தில் அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யலாம் என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட விதியாகும்.

8) இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கிடையே சொத்துகளின் அளவுகள் குறித்து பிரச்சனை இருப்பது தெரிய வருகிறது. ஆகவே, வழக்கு இருதரப்பினர்களின் சொத்துக்கள் அளக்கப்பட்டு, எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு, அதுகுறித்த அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்யப்பட்டால் இவ்வழக்கில் கண்ட பிரச்சனையை தீர்வு செய்வதற்கு உதவியாக இருக்கும். எனவே இம்மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்படுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் இம்மனு அனுமதிக்கப்படவேண்டும் என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9) முடிவில், வழக்கறிஞர் **திரு.P.B.குமார் MS.No.897/2000** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களின் சொத்தை தகுதி வாய்ந்த தாலூக்கா நில அளவையர் உதவியுடன் இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து அளந்து, அதன் பௌதீக தன்மையை பொறுத்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.5,000/-

என நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி, தொகையானது மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையருக்கு வரும் 19.12.2022 அன்றோ அல்லது அதற்கு முன்போ நேரடியாக செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. அழைக்க: 19.12.2022.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்யப்பட்டதை 2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–(N.பாரதிராஜன்)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**

– இல்லை –

ஒப்பம்/–(N.பாரதிராஜன்)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**
ஐ.ஏ.03/2022 இன் ஓ.எஸ்.193/2022
நாள் : 02.12.2022
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---